**O.S. 55/2018 24.03.2022, 11.30 am -11.40 am**

**வா.சா.2, கோவிந்தன், த/பெ.சீனிவாச நாயுடு, வயது 60**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-

என்னை சாட்சியம் அளிக்க வாதி அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். வாதியை எனக்கு சுமார் 30 வருடங்களாக தெரியுமா என்றால் தெரியும். வாதியிடம் கடன் கொடுக்கல், வாங்கல் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதற்காக பிரதிவாதிகள் மீது வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்றால் அவருடைய அப்பா பெருமாள் மூலம் பாத்தியப்பட்டது. பெருமாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் 2003ஆம் வருடம் ராஜவேலுவிடம் இருந்து விலைக்கு வாங்கினார். அந்த கிரையபத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அதில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 263 ஆகும். அதற்கு முன்பு சொத்து யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். பெயர் மாற்றம் மற்றும் வரி ரசீதுகள் யார் செலுத்தி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தில் தற்பொழுது யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, வாதி உள்ளார். வாதியின் மீதுள்ள ஆவணம் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. இன்றைய தேதிவரை 1ம் பிரதிவாதியான ராமமூர்த்தி தான் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1993ல் தாவா சொத்து யாரிடம் இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, பெருமாளிடம் இருந்தது. வாசு என்கிற விஜயசங்கரிடமிருந்து பெருமாள் கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. வாசுவிற்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். வாசுவிற்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையேயுள்ள பரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதியை வாதி தான் கூறினார் என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரயாது என்றும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாடசியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, அவருடைய தகப்பனாருக்கு நான் தான் சொத்து வாங்கி கொடுத்தேன்.

2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.